**சேலம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின் (வளர்ச்சி) செயல்முறைகள்**
**ஆணை பிறப்பிப்பவர்: திரு.கே.எஸ்.இரவிச்சந்திரன்,**

ந.க.எண். 30919/2020/நி3 நாள்:27.12.2022

பொருள்: பணியமைப்பு – சேலம் மாவட்டம் – ஊரக வளர்ச்சி அலகு – 2020–2021ஆம் ஆண்டிற்கு 20% இட ஒதுக்கீட்டின் கீழ் திரு.டி.மணிவேல் என்பவருக்கு ஊராட்சி செயலாளர் நிலையிலிருந்து பணிமாற்றல் முறையில் பதவி உயர்வில் ஊர்நல அலுவலர் நிலை–2 ஆகப் பணியமர்த்தப்பட்டது – 05.12.2022 முற்பகல் பணியேற்பு செய்தது – பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.1780/சிடி–அ2/2022, நாள்.21.10.2022.
2. அரசு கடித (2ப) எண்.110, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ7) துறை, தலைமைச்செயலகம், சென்னை நாள்.10.11.2022.
3. ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரகம், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண். 39098/2021/பி3, நாள்.24.11.2022.
4. சேலம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின் (வளர்ச்சி) செயல்முறைகள், ந.க.எண்.30919/2020/நி3, நாள்.05.12.2022.
5. பனமரத்துப்பட்டி, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), கடித ந.க.எண்.1419/2022/அ1 , நாள்.23.12.2022.

******

**ஆணை:**

சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் 2020–21ஆம் ஆண்டு 20% இட ஒதுக்கீட்டின்படி, ஊராட்சி செயலாளர் நிலையிலிருந்து பணிமாற்றல் முறையில் பதவி உயர்வில் இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை–2 மற்றும் காசாளராகப் பணி நியமனம் வழங்க பார்வை–(1)இன்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெறப்பட்டு, பார்வை–(4)இன்படி, திரு.டி.மணிவேல், என்பவருக்கு பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊர்நல அலுவலர் நிலை–2 ஆகப்பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் ஊர்நல அலுவலர் நிலை–2 ஆகப்பணி பணியேற்பு செய்த நாளான 05.12.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணி வரன்முறை செய்து இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

. . . 2)

| வ. எண். | பணியாளர் பெயர் / பணிபுரியும் அலுவலகம் (திரு) | பணியில் சேர்ந்த தேதி | பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | டி.மணிவேல்,<br>ஊர்நல அலுவலர் நிலை-2,<br>ஊராட்சி ஒன்றியம்,<br>பனமரத்துப்பட்டி. | 05.12.2022<br>முற்பகல் | 05.12.2022<br>முற்பகல் |

மேற்கண்ட விவரப்படி, பணிவரன்முறை தொடர்பான பதிவுகள் தனியரது பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி),
சேலம்.

27.12.22

பெறுநர்

திரு. டி.மணிவேல்,
ஊர்நல அலுவலர் நிலை-2,
ஊராட்சி ஒன்றியம்,
பனமரத்துப்பட்டி.
(அலுவலகத் தலைமை வழியாக)

நகல் – நி3 இருப்பு கோப்பிற்கு